Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றியெப் பொருட்டு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியைப் பாந்தா வெளியை மனமிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளை
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ புரட்டாசிமீ ௨௰௪௨

---

## கும்பகோணம்

### மகாநாட்டுத் தலைவர்கள்

## சொற்பொழிவுகள்.

நாடார் மகாஜன சங்கம் 11-வது மகாநாட்டுத் தலைவர்கள் சொற்பொழிவுகளை மற்றொரு பக்கத்தில் முறையே பிரசுரம் செய்திருக்கிறோம்.

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் நிகழ்த்திய சொற்பொழிவு களனைத்தும் பொன்னே போல் போற்றத்தக்கதும், நாடாருலகம் நன்கு கவனிக்கத்தக்கதுமே யாம். இதற்கு முன் தலைமை வகித்த பத்துத்தலைவர்கள் போன பாதை வழியாக ஒரு சிறிதேனும் செல்லாமலும், தற்கால காந்தியாய் மனதிற்பட்டதைச சொல்லி விட்டுப் போவோமென்றில்லாமலும், உள்ளுணர்ச்சியுடனும் மிக்க அனுதாபத்துடனும் நாடார்களுக் குரிப்தான ஒரு புதுவழியைக் காட்டியிருக்கிறார். அதை இதர சமுகத்தவர்களும் கவனித்துப் பார்க்க வேண்டுகின்றோம்.

அதாவது "தேசம் க்ஷேமமாயிருக்க வேண்டுமானால் வகுப்புணர்ச்சியும் தேசிய வுணர்ச்சியு மாறுபடாமல் ஒன்றை யொன்று தழுவிக் கொண்டிருக்க வேண்டும். சமுகவாழ்க்கை நிலையின்பயனே வகுப்புணர்ச்சியாதல் வேண்டும். தேசிய அபிவிருத்திக்கு ஜாதி பெருந்தடையாயிருக்கிறது. ஆகையால் ஜாதியை விட்டுவிட வேண்டும். உங்களுக்கு மேலுங் கீழும் ஒரு ஜாதியிருப்பதாக வைத்துக் கொண்டு நீங்கள் நடுவில் க்ஷத்திரியர் என்று சொல்வதை விட்டு விட வேண்டும். புதிய சீர் திருத்தக்காரர்கள் புராதன செல்லரித்த சுவடிகளைத் தூக்கிச் செல்ல வேண்டாம். ஒரு உரிமையை அடைய முயற்சிப்பவர்கள் பொதுவாக நாமும் மனிதரென்ற முறையோடு முயற்சிக்கட்டும்" என்று பல உதாரணங்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறார். அவர் தேசிய முன்னேற்றத்தை முன்னிட்டு ஜாதியை விட்டுவிட வேண்டுமென் றபிப்பிராயப்படுகிறார். ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கரவர்களும் இதை ஆதரித்து வெகு உணர்ச்சியுடன் பேசினார்கள். இதை 'திராவிடன்'னும் "தமிழ்நாடு"ம் பூரணமாக ஆதரித் தெழுதியிருக்கின்றன. அவர்கள் கூறும் ஞாயமனைத்தையும் மனமுவந்து நாமும் ஒப்புக் கொள்கிறோம்.

ஆனால் ஒன்று கூறுகின்றோம். மேல ஜாதிப் பேய்பிடித்தவர்கள் நாடார்களைப் பாதாளத்தில் தள்ளி மேல்வர வொட்டாமல் புராதன நூல்களிலும் சர்க்கார் சட்டத்திலும் நாணியநுஷ்டானத்திலும் தாழ்ந்தவர்களென்று நிலை நாட்டப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்த காலத்திற்றான் நாடார்கள் புராதன ஆதாரங்களைக்காட்டி தங்கள் நிலையை உணர்த்தவேண்டிய தேற்பட்டதேயன்றி மற்றவர்கள் சும்மாயிருக்கும் போது நாடார்கள் தங்களுக்கில்லாத வொன்றைச் சொல்லவோ பெறவோ முயற்சி செய்யவில்லை. வியாபாரமும் விவசாயமும் செய்து கொண்டிருக்கும் நாடார்களை தற்போது தொழில் பற்றி க்ஷத்திரியரென்று சொல்ல முடியாதுதான். ஆனால் அவர்கள் தமிழ்நாட்டை ஒருகாலம் ஆண்ட அரசர் குல வழிவந்தவர்களென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. 2000-5000, வைகளுக்கப்பாலுள்ள பல தேசத்தார்கள் நம் நாட்டை ஆண்டு வந்திருக்கும் போதும் வரும்போதும் தமிழ்நாடார்கள் தமிழ்நாட்டை ஒரு காலம் ஆண்டிருக்கத்தான் வேண்டும்.

நாடார்கள் க்ஷத்திரியர்களென்று சொல்லிக்கொண்டு கத்திகேடயந் தாங்கி யாரிடமும் யுத்தத்திற்கு செல்லவில்லை. மற்றவர்கள் தங்களுக்குக் கீழானவர்களென்று வர்ணாச்சிரம தர்மம்படிக்கவுமில்லை. இதுவரையில் தாங்கள் க்ஷத்திரியர்களென்று மற்றவர்களைக் கொடுமை செய்ததுகிடையாது. கொடுமை செய்கிறவர்களுக்குக் கூடக் கொடுமை செய்தது கிடையாது. முட்டாள்தனமாக எந்தப் பத்திரிகையாவது எந்த மனிதனாவது சாணான் தாழ்ந்தவன் என்று எழுதினால் பேசினால், அப்படியல்ல, சான்றான் க்ஷத்திரியன் என்றெடுத்துக்காட்டுவார்கள். அதற்காதாரமாகப் புராதன வழிகளைத் தேடிப் பிடிப்பது முண்டு. நீ எந்தத்தேசம்? எந்தவூர்? என்ன ஜாதி? யார் மகன்? எனவினாக்கள் வரும்பொழுது விடைகள் தயாராயிருக்கவேண்டிய தவசியமே. இதைத்தவிர நாடார்களென்ன செய்யமுடியும்? காந்தியடிகளையே காலச்சக்கரம் வழி மறிக்கும் போது நாடார்களை விட்டு விடாது. ஆகையால் க்ஷத்திரிய சப்தத்தில் யாரும் சம்சயப் படவேண்டியதில்லை. மகாத்மா காந்தி முதற் பிரயாணத்தில் தம் வீட்டு விராண்டாவில் மட்டுமிடங் கொடுத்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் தற்போது பிரயாணத்தில் மகாத்மா குடும்பத்தையே தம்முடைய சமயலறைவரையும் விட்டிருப்பதாக மகாத்மாவே மகிழ்ந்திருக்கிறார். இன்னும் திரு வீரய்யன், திரு. ஸ்ரீநிவாசன், திரு. குழந்தை, எம்.சி.ராஜா, சுவாமி சகஜானந்தம் முதலிய மேதாவிகளை யாவது திரு. ஐயங்கார் வீட்டு வரையனுமதிக்குமா வென்று கேட்கிறோம். இவ்வாறு மேல் ஜாதிப் பசாசுகளும் அவற்றிற்குப் பூசாரிகளான அடுத்தஆசாமிகளும் தங்கள் படிகளிலிருந்து இறங்கிவிடுவார்களானால் மற்றதெல்லாம் மாயமாய் மறைந்து கரைந்து போகக்கூடும். அவ்வாசாட பூதிகளின் கொடுமைகளை அடக்கி தேசப்புனருத்தாரணத்திற்கு நாடார்கள் எப்போதும் தயாராயிருக்கிறார்கள். அப்போது நாடார்கள் எப்பட்டம் பதவிகளையும், உடலுயிரையும் கூடத் தியாகம் பண்ணத்தயார்தான். நாடார் வாலிபருலகம் இப்போதே தயார்தான். தேசிய முற்போக்குக்கு நாடார்கள் எப்போதும் தடையாயிருந்ததுமில்லை; இனியிருக்கப்போவதுமில்லை. அசட்டு வைதீகக் கொடுமைகளையும் தகாதவர்ணாச்சிரம தர்மத்தையும் அறவே ஒழிக்க தேச மக்களுடன் ஒத்துழைக்க நாடாருலகம் எப்போதும் தயாராயிருக்கிறது என்பதை நாம் மனப் பூரணமாய்ச் சொல்லுகிறோம். ஆனால் ஏதாவதொரு வகுப்பினர் செய்வது சரியில்லையெனச் சொல்லிக்கொண்டே அந்த வகுப்பினரை அடக்கிஒருவர் அதன்மேலேறிக் கொள்வதற்கு நாடார்களை ஏணியாக உபயோகித்துக் கொள்ள முடியாது. எல்லாரும் சமம் என்றால், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜாதிக் கொப்பை விட்டு கொஞ்சமும் தாமதமின்றி குதித்துவிடவேண்டும்.

இதை ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கர் திரிகரண சுத்தியுடன் தெளிவாய்ச் சொல்லிவருகிறார்—செய்தும் காட்டுகிறாராயினும் மற்றவர்கள் அந்தப் பரீட்சையில் எவ்வாறு தேர்ச்சியடைந்து வருகிறார்களென்பது தெளிவாய்த் தெரியவில்லை.

நாடார்கள் இதுவரையும் நடந்து வந்திருக்கிறதைக் கொண்டும் இப்போது நடக்கிறதைக்கொண்டும் நாமொப்பனையாக நடக்கிறார்களென்பது தான் சொல்லவேண்டும். நாட்டுக்கு வேண்டாத வேலைகள் தீங்காகவே முடியுமென்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையால் நாடார்களை ஏவலாளாக உபயோகிக்காமல் தோழனாக உபயோகிக்கும் பட்சத்தில். அவர்கள் எப்போதும் தோழனாகவேயிருந்து தோழன் செய்யும் வேலைகளைத் துரிதமாய்ச் செய்வார்களென்றே நாம் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீமான் செட்டியார் சமுதாய வேலை நேர்வழியில் நிகழவேண்டுமென்பதைப்பற்றியும், கிராமப் புனர் நிர்மாணத்தைப்பற்றியும் கூறியபடித்து நாடார்கள் சரியானபடி நாட்டம் வைக்கவேண்டும். நாடார்கள் வேலை செய்ய வேண்டியவிடமும்கிராமம், திருந்த வேண்டிய விடமும் கிராமந்தான் என்பதை தலைவர்களும் சங்கம் நிர்வாகஸ்தர்களும் உணரவேண்டும். கலியாணச் செலவு, சாவுச்செலவு, வியாச்சியப்பற்று, சிக்கனமின்மையாகிய இவைகள் மனிதரைக் கடனில் மூழ்கிவிடச் செய்கிறதென்பதை எடுத்து காட்டியிருக்கிறார். இதை நாடார்கள் நன்கு கவனித்துத் திருந்துதல் வேண்டும். அவ்வாடம்பரவியாதி பணக்காரர்களைப்பற்றி ஏழைகள் குடுமியையும் பிடித்திருக்கிறது எல்லோரும் இவ்வாடம்பர வாய்ப்பட்டலையுமுன் சரியான சீர்திருத்தம் செய்யும்படி தலைவர்கள் முன் வருவார்களாக.

நாடாரிளைஞர்களும், நமது நாட்டுச் சிறுவர்களும் ஸ்ரீமான் செட்டியார் போன்ற களங்கமற்றோர் நேர்வழி நின்று ஜப்பான் சாமுராய் வகுப்பார்போல் தேசப் புனருத்தாரணத்திற்கு உடன்படுவார்களாக.

உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் ரத்தினசாமிநாடார் சொற்பொழிவுகளெல்லாம் மிகவும் நேர்மையுள்ளதேயாம். தீண்டாமை சம்பந்தமாய்ச் சொல்லியிருப்பதை நாடார்கள் மட்டுமல்ல நமது நாட்டார்களும் கவனிக்கத்தக்கது. தீண்டாவகுப்புப் பிள்ளைகளை நமது கலாசாலைகளிற் சேர்த்து இலவசமாய்ப் படிக்க வைக்க வேண்டுமென்பதில் நாடார்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்குதவி செய்வது மிகவும் போற்றத்தக்கதும் புகழும் தர்மமுமாகும். இதில் தாராள மனது செலுத்தும்படி நாடார்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீமான் வெ. கனகசபைநாடாரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் நாடார்கள் சீர்திருத்தம் பெறவேண்டிய பல அம்சங்கள் நிறைந்ததாயிருக்கின்றன. கல்வி நிலையிற் செய்யவேண்டியமாறுபாடுகளைப்பற்றியும் கைத்தொழில், நாணயக் கூட்டுறவு முறைகளைப் பற்றியும் வெகு தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். சமுதாய சீர்திருத்தம் செய்ய வேண்டிய வழிகளிற் சில புது முறையைப் புகுத்தி கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும் மறந்து விடவில்லை. ஸ்ரீமான் நாடாருடைய முடிவுரையில் கெம்பீரத்தை யடக்கி உயர்வின் தொனியைக் கிளப்பிவிடப் பட்டிருக்கிறது. அவர் சமுகத் தொண்டிற்கு தைரியமும் தகுதியும் உள்ளவரென்பதை இடையிடையே அவர பட்சபாதமற்ற சொற்கள் துலக்கியிருக்கின்றன.

நாடார் ஜன சமூகம் முத்திரத்தினர் சொற்பொழிவுகளை முற்றிலுங் கவனித்து ஜாதியச் சமரச சன்மார்க்க நெறிநின்று தேசப் புனருத்தாரணர் களாகி திசை வரும் இசைகளை முகந்து சீரும் சிறப்பும் பெறக்கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

---

## நாடார் மகாஜன சங்கம்

### 11—வது வருஷாந்தர ஜெனரல் மீட்டிங், கும்பகோணம்.

1927-ம் ௵ அக்டோபர் மீ 2, 3 உ களில் கும்பகோணம் அரண்மனைத் தோட்டம் தியேட்டரில் நடைபெற்ற 11—வது வருஷாந்தர ஜெனரல் மீட்டிங்கின் நடபடிக்கைகள்.

**முதல் நாள்**

**2–10–27 காலை 10½ மணி.**

1. சங்கம் பிரஸிடெண்ட் ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்களின் தலைமையின் கீழ் ஜெனரல் மீட்டிங்கு நடைபெற்றது.

2. சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்கள் 1925-ம் ௵ ஏப்ரல் மீ 1 உ முதல் 1927-ம் ௵ மார்ச்சு மீ 21 உயுடன் முடிந்த 2 வருஷத்தில் செய்த வேலைகளைக் குறித்து வாசிக்கப்பெற்ற ரிப்போர்ட் அங்கீகாரம் பெற்றது.

3. 1925-ம் ௵ ஏப்ரல் மீ 1 உ முதல் 1926-ம் ௵ மார்ச்சு மீ 31 உயோடு முடிந்த 2 வருஷத்திய வரவு செலவுக் கணக்குகளைப் பரிசோலனை செய்வதற்காக நியமித்த ஆடிட்டர்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



ளின் ரிப்போர்ட்டை அடுத்தக் கூடும் கௌன்ஸில் மீட்டிங்கில் ஆஜர் செய்து கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

4. இப்போதிருக்கும் ஆர்டினரி சந்தாத் தொகையை வசூலிக்க ஜில்லா வாரியாகப் பிரசாரர்களை நியமிக்க வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

5. நாடார் மகாஜன சங்கத்தை ஜில்லாவாரியாகவும், ஸர்க்கிளாகவும் பிரித்து ஒவ்வொரு ஸர்க்கிளையும் சப் டிவிஷனுகப்பிரித்து ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு யூனியன் ஸ்தாபித்து, 3 ரூபாய் ஸ்தாக்களுக்கு ஏற்படுத்தி தலைக்கட்டு வரி, சந்தாத் தொகைகளை வசூலிக்கவும், சங்க நோக்கத்தைப் பரவச் செய்யவும் வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

6. சங்கம் பிரசிடெண்டாக ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்களை அடுத்த ஜெனரல் மீட்டிங் வரையும் நியமனம் செய்ய ஏகமனதாய்த் தீர்மானிக்கலாயிற்று.

7. சங்க வைஸ்பிரசிடெண்டாக ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். யல். ஸி. அவர்களை அடுத்த ஜெனரல் மீட்டிங்வரையும் நியமனம் செய்ய ஏகமனதாய்த் தீர்மானிக்கலாயிற்று.

### இரண்டாம் நாள்

### மாலை 3—30 மணிக்கு.

சங்கம் பிரசிடெண்ட் ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

### தீர்மானங்கள்.

1. ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்களும், ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார் அவர்களும் அடுத்த ஜெனரல் மீட்டிங் வரையும் சங்கம் காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

2. அடியிற் கண்ட ஆர்டினரி அங்கத்தினர்கள் கௌன்ஸில அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

ஸ்ரீமான்களான வ. அ. புன்னைவனநாடார், செ. அ. வாலசுப்பிரமணிய நாடார், மு. சுடலைமுத்து நாடார், ச. க. துரைசாமி நாடார், ப. ரா. முத்துச்சாமி நாடார், வி. வ. வம நாடார், பழ. க. கக்கசாமி நாடார்—மதுரை, கே. வ. காளியப்ப நாடார் திலக்கோட்டை, பி. வி. டி மாரியப்ப நாடார் ஆண்டிபட்டி, எஸ். ஆர். சுவாமிக்கண்ணு நாடார் திருமலாபுரம், மா. கு. பழனிச்சாமி நாடார் சின்னமனூர், மு. வடிவேல நாடார் சமையநல்லூர், வ. எஸ் எஸ். சங்கரபாண்டிய நாடார், எஸ். வி. எஸ் பழனிச்சாமி நாடார், வி. எஸ். பழனியப்ப நாடார், சிவந்தி நாராயண நாடார், கே. பி. சங்கரலிங்க நாடார், கே. பழனியப்பநாடார்-விருதுநகர், சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர், பி. திருமேனிநாத நாடார், அ. பெ. இரத்தினவேலு நாடார்—அருப்புக்கோட்டை, கே. முத்து நாடார் திருச்சுழி. பி. வ. குமாரவேல் நாடார், அரி. அ. செ. கந்தசாமி நாடார்—தூத்துக்குடி, வீ. மு. கோவிந்தசாமி நாடார் கும்பகோணம், ப. க. சி அய்யம்பெருமாள் நாடார் பட்டிவீரன்பட்டி, ஞா. வி. ஆறுமுக நாடார் சாத்தூர், பி. எஸ். கனியப்ப நாடார் காசரோத், எஸ். கே. ராமசாமி நாடார் நாகபட்டணம், கே. பி. ஜி கலியாணசுந்தர நாடார் கொழும்பு.

இன்னும் 10 ஆர்டினரி மெம்பர்களை நியமனம் செய்ய கௌன்ஸிலுக்கு அதிகாரம் கொடுக்கப்பெற்றது.

3. இந்திய சட்டசபையிலும், மாகாண சட்டசபையிலும், நாடார் வகுப்பினர்களுக்கும் பிரத்தியேக தேர்தல் மூலமாக ஸ்தானங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், இவ்விஷயத்தைப் பற்றியும், இன்னும் மற்றும் பொது விஷயங்களைப்பற்றியும், அடுத்து வரப்போகும் ராயல் கமிஷனின் முன்பு எடுத்துச் சொல்ல அடியில் கண்டவர்களை ஒரு கமிட்டியாக ஏற்படுத்த வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

### கமிட்டி மெம்பர்கள்.

ஸ்ரீமான்களான வெ. கனகசபை நாடார் பெருந்தையார், ஊ. பு. அ. சௌந்தர பாண்டிய நாடார் எம். யல். ஸி. பட்டிவீரன்பட்டி, டானியல் தாமஸ் நாடார் எம். யல். ஸி. பாளையங்கோட்டை, எம். வி. பழனிச்சாமி நாடார், கே. முத்தக்குமாரு நாடார், பி. எம். பாண்டிய நாடார், வ. வ. ஆறுமுக நாடார் மதுரை, எல். வ. முத்து நாடார் அருப்புக்கோட்டை, எம். எஸ். பி. செந்திக்குமாரு நாடார், வி. வி. வடிவேல் முருக நாடார் விருதுநகர், ஏ. ஆர். வ. எஸ் கந்தசாமிநாடார் தூத்துக்குடி, எஸ். நடராஜ நாடார் பி. வ. பி. யல். சென்னை, சேவியர் நாடார் மாயவரம், பி. எஸ் கனியப்ப நாடார் காசரோத், பி. துரைச்சாமி நாடார் பி. ஏ. உடுமலைப்பேட்டை, பி. சௌந்தர பாண்டிய நாடார் பி. ஏ. பி. யல். திருமங்கலம், பி. வி. சிதம்பர நாடார் விருதுநகர்.

4. வட ஜில்லாக்களில் நமது சங்கத்தின் லக்ஷியங்களைப் பரவச் செய்வதற்காகவும், சங்கத்தின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவரவும், சங்கத்தோடு ஒத்துழைக்கவும் கீழ் கண்டவர்களை ஓர் கமிட்டியாக நியமிக்கலாயிற்று.

### கமிட்டி மெம்பர்கள்.

ஸ்ரீமான்களான த. ரெ. ஜீவரெத்தினசாமி நாடார் குருஞ்சிப்பாடிகுப்பம், வி. சுடலைமுத்து நாடார், கே. பெரியதம்பி நாடார், சு. ம. ச. மாரிமுத்து நாடார், அ. சாமிநாத நாடார், அ. லெ. ம. திருப்பணசாமி நாடார்—கும்பகோணம், வி. சாமிநாத நாடார் திருவாரூர், ம. அ. முத்துச்சாமி நாடார் மதுராம்பட்டணம், எஸ். அருணாசல நாடார் பொறையார், எஸ். கே. ராமசாமி நாடார் நாகபட்டணம், வி. முருகையா நாடார் திண்டிவனம், பி. ராமசாமி நாடார் உடுமலைப்பேட்டை, வி. ரெங்கசாமி நாடார் நஞ்சுண்டாபுரம், ராமசாமி நாடார் பொள்ளாச்சி, செ. கருப்பையாநாடார், சவரிமுத்து நாடார்—விள்க்குடி, வ. பி. பெரியதம்பி செட்டியார் பேட்டைபாளையம், கோபால்சாமி செட்டியார் புஞ்சை புளியம்பட்டி, சி. மு. துரைச்சாமி நாடார் தாராபுரம்.

5. (a) நம் குலத்தவர்களைக் கேவலமாய் மதிக்கப்படும் சாணுர்களென்று பகிரங்கமாய் தங்கள் பேப்பரில் பிரசுரம் செய்த "ஹிந்து" "சுதேச மித்திரன்" இந்த இரண்டு பேப்பர்கள் பேரிலும் டி பேப்பர் நிருபர் திவான்பகதூர் ஆர். ராமசந்திரராவ், வி. எஸ். ஐ. அவர்கள் பேரிலும் தகுந்த நடவடிக்கை எடுக்க சங்க காரியதரிசிகளுக்கு இக்கூட்டம் அதிகாரம் கொடுக்கிறது.

தவிர டி இரண்டு பேப்பர்களையும் நம் குலத்தவர்கள் உடனே பகிஷ்கரிக்க வேணுமாய்த் தீர்மானிக்கிறது.

(b) மேல்கண்ட தீர்மானங்களைப் பற்றி நமது சங்கத்திலிருந்தே நடவடிக்கைகள் செய்ய வேண்டியதென்று தீர்மானித்திருப்பதினால் நம்மவர்கள் அதுவரை பொறுமையாயிருந்து ஒருவித மறுப்பு முதலியவைகள் எழுதாதிருக்குமாறு தீர்மானிப்பதுடன் இது விஷயத்தை நம்மவர்களுக்கு சர்க்குலர் மூலமாகத் தெரியப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

6. சங்கம் பிரசிடெண்ட், வைஸ் பிரசிடெண்ட், காரியதரிசிகளுக்கும் மற்றும் சில பிரமுகர்களுக்கும் மாலை சூட்டின பிறகு வந்தனோபசாரத்துடன் 4—45 மணிக்குக் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

---

### சந்தா நேயர்களுக்கு

நமது 11-வது மகாநாட்டின் நடவடிக்கைகள் தபால் கணக்கத்தால் தாமதப்பட்டுக் கிடைத்ததாலும், சரஸ்வதி பூஜையை முன்னிட்டு 4-10-27ல் காரியாலயத்திற்கு விடுமுறை நாளாகையாலும் 7-5-வது சஞ்சிகைகள் இரண்டையும் சேர்த்து கான்பரன்ஸ் நடவடிக்கைகள் அனைத்தும் வெளியீடு செய்யும்படி ஏற்பட்டது. அடுத்த தடவைத்தில் இரண்டுபக்கம் கொண்ட அனுபந்தத்துடன் மித்திரன் உரிய காலத்தில் வெளிவருமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

(ப-ர்)

---

## நாடார் மகாநாடு.

### மூன்றும் நாள் நடவடிக்கைகள்.

கும்பகோணம், அக்டோபர், 3—இன்று மத்தியானம் 11-மணிக்கு மீண்டும் சங்கத் தலைவர் ஸ்ரீ. வெ. கனகசபைநாடார் தலைமையின் கீழ் கூடியது. ஸ்ரீ. சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர் கடவுள் வணக்கம்பாடினார். தலைவர் தனது முகவுரையில் நாடார் மஹாஜனங்களுக்குள் ஒற்றுமை அதிகமாய் ஏற்பட வேண்டுமென்றும், பொது விஷயங்களில் அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சில்லரை மனஸ்தாபங்களையும் மனத்தாங்கல்களையும் அபிப்பிராய பேதங்களையும் விட்டகற்ற வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினார்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

1. "நாடார் தொண்டர் படையின் நோக்கம் நம்ஜன சமூகத்திற்கு நன்மையுண்டாக்கத் தக்கதாயிருப்பதால் இம்மஹாநாடு அதை ஆதரிக்கிறது" என்ற தீர்மானத்தை ஸ்ரீ. டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். ஸி. பிரரேபித்து மேற்படி தொண்டர்படையின் உன்னத நோக்கங்களைப்பற்றியும், அதன் அவசியத்தைப் பற்றியும் பேசினார். தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

2. "நமது சமூக விடுதலையைக் கருதியும், சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும், நமது குல இளைஞர்கள் சுயமரியாதை சத்தியாக்கிரஹ இயக்கத்தில் சமயம் நேரும்போது சேர்ந்து ஒத்துழைக்க விரும்புகிறவர்களை இம்மஹாநாடு ஆதரிக்கிறது."

3. "நமது வகுப்பினர்களால் நடத்தப்படும் கலாசாலைகளில் கைத்தொழில் கற்றுக் கொடுக்கவேண்டியது அவசியம் என்று இம்மஹாநாடு தீர்மானிக்கிறது."

### அஹிம்சை.

"நாடார் மஹாஜனங்களால் நடத்தப்படும் உற்சவங்களில் ஜீவபலியிடக்கூடாதென இம்மஹாநாடு தீர்மானிக்கிறது."

### நாடார் கல்லூரி.

"நம்மவர்களால் நடைபெற்று வரும் உயர்தர கலாசாலைகளில் முக்கியமான விருதுநகர், சிவகாசி பள்ளிக்கூடங்களில் ஏதேனும் ஒன்றை காலேஜ் ஆக்கவேணுமென்று இதற்கு முன் அனேக மகாநாடுகளில் தீர்மானித்தும் அதற்கு யாதொரு பிரயாசை எடுக்காமலிருப்பதுபற்றி இம்மஹாநாடு விசனிக்கிறது."

### நாடார் பாங்கு.

"நாடார் பாங்கை பொதுஜனங்கள் ஆதரித்து ஏராளமான பங்குகள் எடுக்க வேணுமாய் இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது."

### கிளைச் சபைகள்.

"நாடார் வசிக்கும் எல்லா கிராமங்களிலும் கிளைச் சபைகளும் வாசகசாலைகளும் ஏற்படுத்த வேணுமாய் இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது."

### மது விலக்கு.

"சென்னை கவர்ன்மெண்டாரின் கலால சம்மந்தமான கோட்பாடானது சன்மார்க்கத்துக்கு விரோதமானதாயிருப்பதால் அதை முற்றிலும் மாற்றி லாகிரி வஸ்துக்களின் விற்பனையை நாளுக்குநாள் குறைத்து 5 வருஷத்திற்குள பூராவும் நிறுத்திவிட ஏற்பாடு செய்யும்படி இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது."

"சென்னை சட்டசபை, தாலுகா போர்டு, ஜில்லாபோர்டு, முனிஸிபல் கௌன்ஸில், பஞ்சாயத்து கோர்ட்டு, யூனியன் போர்டு முதலிய கவர்ன்மெண்டு ஸ்தானங்களில் அபேக்ஷகராக நமது நாடார் மஹாஜனசங்கம் கவுன்ஸிலால் அங்கீகாரம் பெற்று நிற்கும் நாடாருக்கே ஓட் செய்யவேணுமாய் இம்மஹாநாடு தீர்மானிக்கிறது."

"நம்மவர்கள் திருமண காலத்தில் நடத்திவரும் சடங்குகளுடன் மணமக்களுக்கு உண்டாகும் சந்ததிகளில் ஆண்களுக்கு 12-வயது வரையிலும், பெண்களுக்கு 10-வயது வரையிலும் கட்டாயக் கல்வியைப் பயிற்சி செய்து வைப்பதாகக் கலை உறுதிச் சடங்கு என்னும் சடங்கு அக்கினி சாக்ஷியாகச் செய்து முடிக்கவேணுமாய இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது."

வழக்கம்போல் வந்தனோபசாரத்துடன் மஹாநாடு இனிது கலைந்தது.

---

(4-ம் பக்கத்தின் தொடர்பு.)

சபைகளுக்கு நடக்கும் தேர்தெடுப்புகளிலிருந்து தெரியவருகின்றது. ஆகவே நம் ஜாதியாருக்கு இவ்வித அறிவும் கல்வியும் புகட்டி அவர்கள் தங்கள் சுதந்திரங்களை நன்கு உபயோகப்படுத்துமாறு அவர்களைத் தூண்டுதல் நமது முதற் கடமையாகும். பிரதிநிதித்வம் என்பது என்ன வென்பதையும் அதன் நன்மைகளையும் அவசியத்தையும் விளக்கி, தேர்தெடுப்புக் காலங்களில் யோக்கியதை, ஒழுக்கம், நற்குணம் முதலியன பொருந்தியவர்களையே நாம் தேர்தெடுக்க வேண்டுமென்பதையும் போதிக்கலாம். இவ்வறிவு ஏற்படுவதற்கு ராஜீயக் கல்வி அவசியம்.

நம்மில் இன்னும் அனேக பிரசார வேலைகளின் மூலமாய் ஆங்காங்குள்ள நம் சகோதரர்களுக்கு ராஜீயக் கல்வி புகட்டுவதன்றி ஒரு முதல்தரமான தினசரிப் பத்திரிகை ஏற்படுத்தி நடத்துவதாலும் இந்நோக்கம் விருத்தியடையும். மேனாட்டில் ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் தங்கள் அங்கத்தினரை ஒன்று கூட்டும் பொருட்டும், அன்றாடம் நடைபெறும் விஷயங்களை அவர்களுக்குத் தெரிவித்தற் பொருட்டும் ராஜீய விஷயங்களில் அவ்வப்போது பயிற்சி அளித்தற்பொருட்டும் தங்கள் தங்கள் பத்திரிகைகளை ஏற்படுத்தி நடத்துகின்றனர். பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள நமக்கு நம்முடையதென ஒரு தினசரித் தமிழ்ப் பத்திரிகை இல்லாததே ஒரு பெருங்குறையாகும். நம் நலத்தைக் கருதி உழைத்துவரும் இரண்டொரு வாராந்தரப் பத்திரிகைகள் இருப்பது எனக்குத் தெரியும். ஆயினும் அவைகளுக்குப் போதுமான ஆதரவு அளிக்கப்படாததுபற்றி அவைகள் அதிகப்பயன்படுமாறு பிரசாரமாகவில்லை. அவைகளுக்குப் போதுமான சகாயம் புரிந்து கூடுமானால் அவைகளைத் தினசரிப் பத்திரிகைகளாக மாற்றுவோமானால் நம் ராஜீய வேலைக்கு அவை மிகவும் உதவி செய்யக் கூடும்.

மிற்க, நாம் இன்னும் ஊக்கத்துடன் முன்வந்து ராஜீயத் துறைகளில் புகுந்து நமக்கு வேண்டிய சாதனங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றுகின்றது. ஸ்தல ஸ்தாபனங்களிலும் (Local Bodies) சட்ட நிருபண சபைகளிலும் நம்மவர்களில் இன்னும் அனேகர் சென்று நம் பிரதிநிதிகளாயிருந்து நமக்கு வேண்டிய நன்மை செய்யலாம். சிற்சில காரணங்களை முன்னிட்டு நம் சுயபலத்தோடு சர்க்கார் உதவியும் தேட வேண்டியவர்களாயிருக்கிறோம். அவ்வுதவியை வேண்டும் சமயங்களிலும் நாமபெற்ற நமது வகுப்பினருக்கென உழைப்போமாக. நம் நிலைக்குத் தக்கவாறு சர்க்காரும் தங்களாலியன்ற உதவி நாம் கேட்போமாகில் அளிப்பார்களென்றே நான் நம்புகிறேன்.

### முடிவுரை.

என் அவகாசத்திற்கும், சக்திக்கும் ஏற்றவளவு நீங்கள் எனக்கிட்ட பணியைச் செய்து முடிக்க நான் முயற்சித்திருக்கிறேன். நம் வகுப்பு சம்பந்தமானதும், நமக்கு முக்கியமானதுமான பல விஷயங்களையும் பற்றி நான் போதுமான அளவு கவனித்திருப்பதாகக் கூறவில்லை. இடமின்மையாலும் அவகாசமின்மையாலும் என்னால் கவனிக்காது விடப்பட்ட சில விஷயங்களை நீங்களே ஆலோசனை செய்வீர்களென நம்பி நான் விட்டுவிடுகிறேன். இக்கூட்டத்திற்கு வந்துள்ள ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு நமது வகுப்பு முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவி புரியவேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டு இக்கூட்டத்தின் தீர்மானங்களையும் முடிவுகளையும் நிறைவேறச் செய்தல் வேண்டும். அதுவே நீங்கள் எனக்கியற்றும் கைமாறாகும். இன்றேல் இக்கூட்டமும் இதன் தீர்மானங்களும் பயனிலவாய் முடியும். ஆகவே நாம எல்லோரும் ஒத்த மனத்தவர்களாய் நாம பொறுப்புடன் செய்ய வேண்டிய வேலை இன்னதென்று மனதிற்கொண்டு இறைவன் திருவருளையும் நாடி ஊழியம் செய்ய ஆரம்பித்தால் அனைத்தும் இனிது முடியும் என்பதற்கு ஐயம் இல்லை. நம் சங்கம் நீடூழி வாழ்க ! வாழ்க !!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ராஜதானியின் பல இடங்களிலும் இவ் ஆசிரமம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நெசவு சாலைகளும், சோப்பு செய்தல், மெழுகு வர்த்தித் தொழிற்சாலைகளும், பெஜவாடா முதலிய இடங்களில் ஏற்பட்டிருக்கும் பின்னல் சாலைகளும் சில காலமாகவே ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. நாமும் இவ்விதமே பற்பல சிறிய கைத்தொழில்களை எங்கும் ஸ்தாபிக்கவேண்டும். இதற்கு ஏராளமான முதலாவது, பெரிய கட்டடங்களாவது ஆரம்பத்தில் தேவையென்று நினைக்கவேண்டாம். தேர்ச்சி பெற்ற சில தொழிலாளர்களைக் கொண்டும், சொற்ப முதலைக்கொண்டும், சிறிய கட்டடங்களிலே புதிய கைத்தொழில்களை நாம ஏற்பாடு செய்யலாம். இவ்வாறு ஜப்பான் தேசத்தில் ஜனங்கள் ஏராளமான சிறிய கைத்தொழில்கள் நடத்திவருவதால் அங்கு செய்து முடிக்க வியாபாரத்திற்கு ஏற்றுமதியாகாத பொருள்கள் ஒன்றும் இல்லை. யுத்தகாலத்தில் நமக்கு வேண்டிய பொருள்கள் யாவும் இத்தேசத்திலிருந்து செய்தனுப்பப்படவில்லையா?

இனி இக்கைத்தொழில்களுக்கு வேண்டிய சொற்ப முதலும் எப்படிச் சேகரிக்கலாமென்று கேட்கலாம். இது நாம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயமே. போகப்போக இக்கைத்தொழில்களில் ஊதியம் கிடைக்குமெனினும் முதலில பொருள் செலவு செய்யாமலல்லாமல் இவைகளை ஆரம்பிக்க இயலாது. சர்க்காரில் புதிய கைத்தொழில் ஸ்தாபிப்போர்களுக்குச் சொற்ப உதவி செய்வதற்கென ஒரு ஆக்ட் ஏற்படுத்தி அதன்படி உதவி செய்கிறார்கள் ஆயினும் நாம் மிகுதியும் அதை எதிர்பார்த்து இருப்பது நன்றன்று. நமக்கு வேண்டிய மூலதனத்தை எப்படிச் சேகரிக்கலாமென்று அடுத்த தலைப்பின் கீழ்க்கூறுகின்றேன்.

நமது புதிய கைத்தொழில்கள் ஸ்தாபனம் செய்து வியாபாரத்திற்கென மிகுதியான பொருள்கள் தயாரிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இவைகளை எவ்வாறு நாம் பரவச்செய்வது? தற்காலத்தில் பிரசுரங்களினாலேயே தான் வியாபாரப்பொருள்கள் எங்கும் பரவுகின்றன. ஆகவே கைத்தொழில்களும் விருத்தியடைகின்றன. மேனாட்டார் வருடமொன்றுக்கு லக்ஷக்கணக்கான பவுன்கள் பிரசுரத்திற்கென்று செலவிடுகின்றனர். "பிரசுரமின்றேல் வியாபாரம்" குறைவு என்பதை அவர்கள் நன்குணர்ந்துள்ளனர். நாமும் பிரசுரத்திற்காகப் பொருள் செலவிட வேண்டுவது அவசியம். ஆயினும் சுருக்கமுடன் கவனித்துப் பிரசுரம் செய்வதனால் ஏற்படும் செலவை மிகுதியும் குறைக்கலாம்.

மிகுந்த லாபத்தை முதலிலேயே எதிர்பாராது நாம் அனேக புதிய சில்லறைக் கைத்தொழில்களை ஸ்தாபிப்போமாயின் நமக்கு அவைகளினின்றும் அளவற்ற நன்மை ஏற்படுமாதலின் அவைகளை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளை நாம செய்வோமாக!

## நாணயமும், கூட்டுறவு முறைகளும்.

இக்காலத்தில் தொழிலும் வியாபாரமும் பெருவாரியாய் நடப்பதால் அவைகளுக்கு வேண்டிய பொருளுதவியை ஏராளமாய் ஒருவரே செய்தல் முடியாததாகும். இதைக்கொண்டே எவ்வித அபிவிருத்திக்கும் கூட்டுறவு முறைகள் கையாளப்படுகின்றன. கூட்டுறவு இலாகாவும் சங்கங்களும் எவ்வளவு உபயோகமாயிருந்து வருகின்றனவென்பதை நான் உங்களுக்குக் கூறவேண்டுவதில்லை. இனி நாம் எவ்விதம் இக்கூட்டுறவு முறைகளைக் கையாளலாம் என்பதை மட்டும் ஆலோசிப்போம்.

ஜப்பான் தேசத்திலும் மற்றும் சில தேசங்களிலும் அரசாங்கத்தாரே தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதவி புரிந்து அவைகள் பொருள்கள் தயாரிப்பதற்கான ஒத்தாசை செய்கின்றனர். பின்பு இப்பொருள்கள் தயாரிக்கப்பட்டதும் அவைகளை எங்கும் வியாபார மூலமாய்ப் பரவுவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகளையும் அரசாங்கத்தாரே செய்கின்றனர். ஆனால் நமது நாட்டிலோ பொருள்களைத் தயாரிப்பதற்கோ அவைகளை விற்பனை மூலம் பரவச் செய்வதற்கோ அரசாங்கத்தார் புரியும் உதவி ஒன்றும் கிடையாது. ஏதோ சிற்சில கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்குமட்டும் சிறிது உதவி செய்கின்றனர். ஆகவே இவ்விரண்டு தொழில்களையும் நாமே செய்துகொள்ள வேண்டும்.

முதலில் நமக்கு வேண்டிய பொருளுதவியைப்பற்றிக் கவனிப்போம். கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலதனத்தைக் குறைந்த வட்டிக்குக் கொடுத்துதவுகின்றன. நாமும் ஒரு நாணயச்சங்கம் நடத்திவருகின்றோம். ஆயினும் இதன் மூலதனம் குறைவாயிருப்பதால் இது பெரிய கைத்தொழில்களுக்கு வேண்டிய உதவி செய்ய முடியாது. அன்றியும் பல இடங்களிலும் இதன் கிளைகள் இல்லாததால் ஆங்காங்கு வேண்டிய திரவியசகாயம் செய்ய இயலாது. ஆகவே நம் நாணயச் சங்கத்தின் உபயோகம் அதிகரிக்க வேண்டுமென்றால் அதன் கிளைகள் எங்கும் ஸ்தாபிக்கப்பட்டு ஆங்காங்கு திரவியம் சேகரித்து புதிய கைத்தொழில்களுக்கு வேண்டிய திரவிய சகாயம் செய்யவேண்டும். இவ்வாறு ஏற்பாடு செய்தால் அங்கிய நாணயச் சங்கங்கள் லாபம் குறைவதன்றி நம் கைத்தொழில்களும் நாளுக்கு நாள் விருத்தியடையும். இதைக்கொண்டு உபயோகமற்ற லாபத்தைமட்டும் எதிர்பாராது, கைத்தொழிலையும் நாம் ஆதரிக்க வேண்டுமென்று நான் கூறுவதாகக் கொள்ளலாகாது. எக்கைத்தொழில்கள் திரந்தரமான லாபத்தை அளிக்குமென்று நாம் அறிந்திருக்கிறோமோ அவைகளுக்குமட்டும் நாம் உதவிபுரியலாமல்லவா?

மூலதனத்தின் குறைவினால் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு "கூட்டுறவு" முறைகள் பெரிதும் பயன்படுகின்றன. இவைகளைப்பற்றி விஸ்தாரமாக உங்களைப் போன்ற தேர்ந்த வியாபாரிகளுக்கும் தொழிலுத்யோகஸ்தர்களுக்கும் நான் எடுத்துக் கூறுவது மிகையாம. ஆயினும் இவ் விஷயங்கள் நம் வகுப்பினர் யாவருக்கும் தெள்ளற விளங்க வேண்டுமென்பதே என் நோக்கம். தற்காலத்திலிருப்பதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாகக் கூட்டுறவுச்சங்கங்கள் நமது நாட்டுப்புறங்களிலும் நகரங்களிலும் ஸ்தாபனமாவதற்கு இவைகளைப்பற்றிய அறிவே முக்கிய சாதனமாகும். இக்கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் வேலைகள் அனேகம் உள்ளன. முதலாவது ஆங்காங்குள்ள பொருளை வாங்கிச் சேகரித்து வைத்துக்கொள்ளலாம். பிறகு இப்பொருளை லாபகரமான தொழில்களைச் செய்யவிரும்பும் யோக்கியப் பொறுப்பான நம் வகுப்பினருக்குக் குறைந்த வட்டிக்குக் கொடுத்துதவலாம். மிகுந்த வட்டிக்கு கடன் வாங்காது நம் வகுப்பினரைத் தடுத்து உதவி புரியலாம். பெரிய கைத்தொழில்களை நடத்துவதற்கான நவீன கருவிகள் முதலியவை வாங்குவதற்கும், வேண்டிய சகாயம் செய்யலாம். நாம் ஏற்கனவே கூறியுள்ளவாறு பெரிய கரும்புத்தோட்டங்கள் வாங்குவதற்கும், சர்க்கரை ஆலைகள் ஸ்தாபிப்பதற்கும், காய்ச்சுவதற்கும் இவ்வித கூட்டுறவு முறைகள் மிக உதவியாயிருக்கும். கைத்தொழில்களுக்கேயன்றி விவசாயத்திற்கும் அளவிறந்த நன்மை இவ்விதக்கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்படும். நம்மில் அனேகர் வியாபாரிகளாயும், தொழில் செய்பவர்களாயும் இருக்கிறார்களேயன்றி விவசாயிகள் சொற்பம் என்பதால் நான் அதிகம் விவசாயத்தைப்பற்றி கூறாதுவிட்டேன். நமது ராஜப்பிரதிநிதி விவசாயம் முன்னேற்றமடைய வேண்டுமென்ற ஒரு பெருநோக்கம் கொண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். நமது மாகாண அரசாங்கத்தாரும் சில நாட்களுக்கு முன்பு விவசாயத்திற்காகப் பொருளுதவி செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். ஆகவே இச்சமயத்தில் நம் கூட்டுறவுச் சங்கங்களும் அதிகம் ஸ்தாபிக்கப்படின் விவசாயம் நன்கு விருத்தியடையும் என்பது திண்ணம். நம் கைத்தொழிலுக்கு வேண்டிய இயற்கைப் பொருள் அனைத்தும் விவசாயத்தை விருத்தி செய்வதால் நாம் எளிதில் பெறக்கூடும்.

ஆதலால், நமது நாணயச்சங்கங்களும் முறைகளும் அபிவிருத்தியடைய வேண்டியிருந்தால் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுளது. அதாவது நம் இளைஞர்களில் அனேகருக்கு இம்முறைகளில் தேவையான பயிற்சி அளிக்கவேண்டும். இதற்காக நம் பள்ளிக்கூடங்களிலேயே வேண்டிய சில பாடங்களும் பயிற்சியும் கொடுக்கப்படலாம். கூட்டுறவு முறைகளிலும் நமது இளைஞர்களுக்குப் பயிற்சி முக்கியம். தஞ்சாவூரில் இம்முறைகளில் பயிற்சியளிக்கும் பொருட்டு ஒரு பாடசாலை ஏற்படுத்த உத்தேசித்துள்ளனர் இந்நோக்கத்தை ஒட்டியே நம் மாணவர்களையும் தேர்ச்சியளிக்கும் பொருட்டு நாமும் நம் பாகங்களில் இவ்விதப் பாடசாலைகள் ஸ்தாபிக்கலாமென்று எனக்குத் தோன்றுகின்றது.

## சமுதாயச் சீர்திருத்தம்.

நமது சமுதாய வாழ்க்கையைப்பற்றியும் அதில் ஏற்படவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும் நாம் சற்று கவனிப்போம். சுயநலங் கருதாது ஊழியம் செய்யவேண்டுமென்று விருப்பம் மிகுந்த வாலிபர்கள் செய்யக்கூடிய வேலை இதில்தான் அதிகம் உள்ளது. பரம்பரையான பல பழக்க வழக்கங்களும், கொள்கைகளும் நம் சமுதாய வாழ்க்கையில் அநேகம் உள்ளன. அவைகளில் சீர்திருத்தமுற வேண்டிய சிலவற்றை மட்டும் நான் இங்கு கூறுகிறேன். ஆனால் இச்சீர்திருத்தங்களெல்லாம் இப்பொழுதே ஏற்பட்டு பழைய பழக்க வழக்கங்கள் மாறுபட வேண்டுமென்று நான் சொல்வதாகக் கொள்ளலாகாது. ஒற்றுமையாக வேலை செய்தால் நாளடைவில் இவ்விதச் சீர்திருத்தங்கள் ஏற்படலாமென்று நான் நம்புகிறேன். சமுதாய விஷயங்களில் திடீரென பெரிய மாறுபாடுகளை ஏற்படுத்த முயல்வதைவிட நிதானமாய்ப்போவது முற்றும் பயனளிக்கத்தக்கதாகும்.

முதலில் நாம் செய்துவரும் பயனற்ற வீண் செலவுகளைக் கவனிப்போம். கடன் வாங்கியும் நம்மில் அனேகர் மணம் முதலிய சுப சடங்குகளுக்கும் சாவு முதலிய அசுப சடங்குகளுக்கும் ஏராளமான பொருட்செலவு செய்கின்றனர். இதனால் நம்மவரில் அனேகர் தீராக்கடன் சுமக்கும்படி நேரிடுகின்றது. இதைத் தடுப்பதற்கு நம் மாலியன்ற முயற்சியை நாம் செய்ய வேண்டும். நமது ஜனங்களுக்கு அறிவு புகட்டுமாறு பிரசுரங்களினாலும் அடிக்கடி பத்திரிகைகளின் வாயிலாகவும் நாம் அறிவு புகட்டலாம். பிரசாரகர்கள் எங்கும் சுற்றி இவைகளைக் கண்டித்துக் கூறுவதாலும் சீர்திருத்தம் ஏற்படும்.

இனி நம் வாலிபர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்கள் படியும் பொருட்டும் நாம் சமுதாய ஊழியஞ் செய்யலாம். காட்சிகளின் மூலமாக மதுவிலக்கு முதலிய பிரசாரங்கள் செய்தல் கூடும். ஏழை மாணவர்கள் கல்வி கற்றற்பொருட்டு விடுதிகள் அமைப்பதும் அவர்கள் போஷணைக்கான திரவிய சகாயம் செய்வதற்கு நிதி சேர்ப்பதுமான இச்சேவை வேலைகளும் சமுதாய வாழ்க்கை நலத்திற்கென நாம் கைக்கொண்டு நடத்தலாம். கிராமங்களில் காலரா அம்மை இவை நம் ஜனங்களுக்குப் போதிப்பதும் வியாதிகள் வருகாலத்து அவைகள் பரவாது தடுப்பதற்கும் வேண்டிய உபாயங்களைச் செய்வதும் சமுதாய ஊழியத்தின் ஒரு பகுதியாகும். இன்னும் கிராமங்களுக்கு வேண்டிய பல உதவிகளும் புரியலாம். இவ்வித நோக்கங்களோடு நாம் எங்கும் நமது வாலிபர்களைக்கொண்டு "சமுதாய ஊழிய சங்கங்கள்" ஏற்படுத்துதல் அவசியம். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில் இவ்விதச் சங்கங்கள் ஏராளமாய் ஸ்தாபனமாகி அளவிறந்த நற்பயன் விளைவிக்கின்றன. ஊரைச் சுத்தமாக வைப்பது முதல் பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணம் வரை இவைகள் அனேக உபயோகமான காரியங்கள் செய்வதற்கேற்ப விருத்தியடைந்துள்ளன. இம்மாதிரி ஊழியஞ் செய்யக்கூடிய நாமும் ஸ்தாபித்து நமது சமுதாய நலத்தை முன்னடையச் செய்ய வேண்டுமென்பது என் நோக்கம்.

## கிராமப் புனர் உத்தாரணம்.

நமது தேசத்தின் கிராமங்களைப் புத்துயிர்ப்பிப்பதற்கான ஒரு இயக்கம் நாடெங்கும் ஏற்பட்டிருப்பது உங்களில் அனேகருக்குத் தெரியுமென எண்ணுகிறேன். நமது மந்திரிமாரும் இதற்கான வேலையை ஆரம்பித்துள்ளனர். நமது நாட்டின் நலங்கருதும் ஒவ்வொருவரும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு தம்மாலியன்ற ஊழியம் செய்யவேண்டுமென்பது அவசியம். நமது நாட்டில் பெரும்பான்மையோர் மிகுந்த காலமாகவே கிராமங்களிலேயே வசிக்க விரும்புகின்றனர். இதற்குக் காரணங்கள் பல உள. இவ்வாறு கிராமங்கள் மிகுந்து செழித்திருந்த நம் நாட்டில் தற்காலத்தில் பல காரணங்களைக் கொண்டு அனேக கிராமங்கள் அழிவு அடையக்கூடியனவாயுள்ளன. இவைகளை எவ்வாறு அழிவுறாது காக்கலாம் என்பதே இவ்வியக்கத்தின் நோக்கம். நாம் எவ்வித ஊழியம் செய்யலாமென்பதை மட்டும் நான் சுருக்கக்கூறுகிறேன்.

முதலாவது நமது நாட்டுப் புறங்களின் தற்கால நிலைமையைக் கவனித்து நாம் அறிய வேண்டும். அவைகளின் குறைவுபாடுகள் எவை யென்பதைக் கண்டுகொள்ள வேண்டும். இக்காரியத்திற்கு நமது வாலிபர்களே முன்னின்று செய்யவேண்டும். இவர்களால் நடத்தப்பட்டு வரும் புனர் உத்தாரண சபைகள் எங்கும் ஏற்படுத்தப்படுவதோடு ஓர் மத்திய சபையும் ஸ்தாபிக்கப்படல் அவசியம். சில கிராமங்களில் கல்வி பயிற்றுவிப்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லாமலிருக்கலாம். இங்கு இவ்வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கலாம். நவீன முறைகளும் விஷயங்களும் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் கற்பிக்கப்படலாம். இது சம்பந்தமாக கண் காட்சிகளும், பொருட் காட்சிகளும் ஏற்படுத்தப்படின் நலமாயிருக்கும். அவைகளைக் கொண்டே கிராமங்களை சுகாதார விதிப்படி வைத்துக் கொள்ளுவதற்கும், நோயற்ற வாழ்வைப் போற்றுவதற்கும், நோய் வந்த காலத்தில் அவைகளைத் தடுப்பதற்கும் வேண்டிய அறிவையும் ஊட்டலாம். கிராம விவசாயிகளுக்கு புதிய விவசாய முறைகளின் நலத்தையும், கூட்டுறவு முறைகளின் மேன்மையையும் எடுத்துக் காட்டி பிரசாரங்கள் செய்யலாம். இவ்வித பிரசாரங்கள் செயயக்கூடிய தேக வன்மையும், மனோவன்மையும் நமது இளைஞர்களுக்கே உண்டாதலின் அவர்களை இவ்வூழியத்தில் ஒரு கருத்துவைக்கும்படி நாம் அவர்களைத் தூண்ட வேண்டும். இன்னும் அனேக விதங்களில் நம் கிராமங்கள் மலினமடையாதபடி தடுப்பதற்கும், மலினமடைந்தவைகளைப் புத்துயிரளிப்பதற்கும் முயற்சிகள் செய்யலாம். நான் கூறியுள்ளவை மிகச் சிலவே. இவற்றிற்கு வேண்டிய பொருளுதவியை நம கிராமங்களின் பொருட்டும் அவைகளில் வசிக்கும் நம் வகுப்பாரை முன்னிட்டும் நாம செய்யக் கட்டுப்பட்டிருக்கிறோம். நமது வாலிபர்கள் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வருவார்களாக.

## ராஜீய விஷயங்கள்.

ராஜீயத் துறையில் நாம் எப்பொழுதும் மிகுந்த நிதானமாகவே உழைத்து வந்துள்ளோம். தேச முன்னேற்றத்திற்கு வேண்டிய துறைகளில் மற்றெலவா வகுப்பினரையும் போல் நாமும் கருத்துடன் உழைத்தும், உழைத்துக்கொண்டும் வருகிறோம். நாம் செய்யவேண்டிய வேலை ஒன்றுள்ளது. அதைமட்டும் நான் இங்கு கூறுகிறேன்.

ராஜீய விஷயங்களில் போதுமான கல்வி நமது வகுப்பினர்கள் யாவருக்கும் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் வசிக்கும் எல்லா ஜனங்களும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் பாத்தியதைகளையும், சுதந்தரங்களையும் ஒரேயுரிமை வகிப்பதும் உபயோகப்படுத்துவதும் இல்லை. பொதுவாக நம் நாட்டில் இன்னும் பெரும் பான்மையோர் தம் சுதந்தரங்கள் இன்னவை யென்று நன்கு அறிந்து அவைகளை உபயோகப்படுத்துவதற்கான அறிவு பெறவில்லை யென்பது நமது சட்ட நிரூபண சபை முதலிய

(இதன் தொடர்பு 3-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



தைக் குறித்து இம்மகாநாடு தனது அதிருப்தியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது."

திருமலாபுரம் ஸ்ரீ. எஸ். ஆர். சாமிக்கண்ணுநாடார் ஆமோதித்துப் பேசினர். தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

## சட்டசபை பிரதிநிதித்துவம்.

"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீ. எஸ். ஏ. முத்து நாடார் பின்வரும் தீர்மானத்தைப் பிரரேபித்தார்.

"இந்தியா சட்டசபையிலும், மாகாண சட்டசபையிலும் நாடார் வகுப்பினர்களுக்குப் பிரதிநிதியைகதேர்தல்மூலமாக ஸ்தானங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், இது விஷயத்தைப்பற்றியும், இன்னும் மற்றப் பொது விஷயங்களைப்பற்றியும் அடுத்து வரப்போகும் ராயல் கமிஷனின் முன்பு எடுத்துச் சொல்ல அடியில்கண்ட கனவான்களை ஒரு கமிட்டியாக ஏற்படுத்த வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

ஸ்ரீமான்கள், வி. கனகசபை நாடார் பொறையார், டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். வி. பட்டிவீரன் பட்டி, டானியல் தாமஸ் நாடார் எம். எல். வி. பாளையங்கோட்டை, எம். வி. பழனிச்சாமிநாடார் மதுரை, எஸ். ஏ. முத்துநாடார் அருப்புக்கோட்டை, எம். எஸ். பி. செந்திக்குமாருநாடார் விருதுநகர், கே. முத்துக்குமாருநாடார் மதுரை, ஏ. ஆர். ஏ. எஸ். கந்தசாமிநாடார் தூத்துக்குடி, பி. எம். பாண்டியநாடார் மதுரை, வி. வி. சண்முகநாடார் விருதுநகர், பி. வி. சிதம்பரநாடார் விருதுநகர்.

மதுரை ஸ்ரீ. ப. ரா. முத்துச்சாமி நாடார் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினர்.

மேற்படி கமிட்டி மெம்பர்களுடைய பெயர்கள் விஷயமாய் சற்று அபிப்பிராயபேதமேற்பட தலைவர் ஆலோசனையின் மீது மேற்படி பெயர்களை காலை நிச்சயம் செய்துகொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டது. தீர்மானத்தை பிரரேபித்தவர் ஆமோதித்தவர் இருவரின் சம்மதத்தின் மேல், பெயர்களில்லாமல் தீர்மானம் மட்டும் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

## அனுதாபச் செய்திகள்.

விருதுநகர் சங்கரபாண்டியநாடார், நாகர் கோவில் டேவிட்நாடார், கமுதி வித்தியாபிவிருத்தி சங்கம், தூத்துக்குடி ஷண்முகவேல்நாடார்மெமோரியல் வாசகசாலை, மதுரை பி. டி. ராஜன், எம். எல். ஸி., எஸ். முத்தையாமுதலியார், வி. எஸ். ரத்னசபாபதிமுதலியார், காரைசி சுப்பையாநாடார், காரைசி வர்த்தகர்கள், கே. எஸ். கே. அய்யாசாமிநாடார், சென்னை எஸ். நடராஜநாடார், டாக்டர் வரதராஜுலுநாயுடு, சீர்காழி சிதம்பரநாதமுதலியார், ஸ்வாமி சகஜானந்தர், ஸர். கே. வி. ரெட்டி ஊர்க்காடு ஜெமீந்தார், சிங்கம்பட்டி ஜெமீந்தார் இவர்களிடமிருந்து வந்திருந்த அனுதாபத் தந்திகள் ஸ்ரீ. டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியநாடாரால் படிக்கப்பட்டன.

## அக்கிராசனரின் முடிவுரை.

தலைவர் தனது முடிவுரையில், நாடார்மஹாஜன சங்கம் பல வருஷங்களுக்கு முன் ராவ்பகதூர் ரத்னசாமி நாடாரால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், அது செய்து வரும் நல்ல வேலைகளைக் கண்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் கூறி, மஹாத்மா காந்தி தென்னாட்டிலிருக்கும் பிராமணர் பிராமணரல்லாதார் இயக்கம் தனக்கு விளங்கவில்லை என்று சொல்லி வருவதாகவும், தானும் ஸ்ரீ. ஈ. வெ. இராமசாமி நாயக்கரும், டாக்டர் வரதராஜுலுவும் அவருக்கு இந்த இயக்கத்தைப்பற்றி எடுத்துச் சொல்லியும், மகாத்மாஜிக்கு குருகுலப் போர் விஷயம் தெரிந்திருந்தும்கூட அவர் தனக்கு அவ்வியக்கம் விளங்கவில்லை என்று சொல்லுகிறார்; நாம் வெகு காலமாய் சிலருக்கு அடிமைப்பட்டு வந்தோம்; இப்பொழுது சுயமரியாதையுடன் வாழ ஆசைப்படுகிறோம்; ஒவ்வொரு வகுப்பாருடைய மனதிலும் சுயமரியாதை எண்ணம் ஏற்பட்டிருப்பது தான் இந்த இயக்கம்; ஹிந்து—முஸ்லிம் இயக்கத்தைத் தெரிந்துகொண்ட மகாத்மா இந்த இயக்கத்தைத்தெரிந்துகொள்ளவில்லை என்கிறார்; சுய மரியாதை இயக்கம் நமக்குள்ளாக உண்டாக வேண்டுமேயொழிய மற்றொருவரும் நம்மில் மூட்ட முடியாது; இப்படியிருக்க, மகாத்மாஜி வருணாச்ரம தர்மத்துக்கு ஒரு வித புது அர்த்தத்தைக் கொடுத்து அதை சகலரும் ஒப்புக்கொள்ள வேணுமாய்ப்பிரசாரமும செய்ய வாரம்பித்துவிட்டார்; சுய மரியாதை இயக்கத்தில் நாம் போராடினல் நிச்சயம் நாம் சுயராஜ்யமடைவோம் என்றும் பேசினர்.

வந்தனோபசாரத்துடன் மஹாநாட்டு முதல் நாள் நடவடிக்கைகள் முடிந்தன.

## இரண்டாம்நாள் நடபடிக்கைகள்.

அக்டோபர் மீ 2 வ

இன்று மாலை 3. மணிக்கு சங்கத் தலைவர் ஸ்ரீ. வெ. கனகசபைநாடார் அவர்கள்தலைமையில் கூடி கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீ இ. கருப்பையாபிள்ளையாவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடியபின், தலைவர் தனது பிரசங்கத்தைச் செய்தார்.

### அனுதாபம்.

1. "விருதுநகர் ஸ்ரீ ஏ. சி. பொன்னுப்பநாடார் என்றீ சங்கரலிங்க நாடார், கும்பகோணம் வர்லிய நாடார் சங்கத்தின் பொருளாளரும் மேற்படி சங்கம் நிறுவுவதற்கு முக்கிய காரணஸ்தருமான ஸ்ரீ. கே. எஸ். ரத்தினசாமிநாடார் இவர்களுடைய அகால மரணத்துக்காக இம்மகாநாடு வருந்துகிறது" எனும் தீர்மானம் அக்கிராசனரால் பிரரேபிக்கப்பட்டு எல்லோரும் எழுந்து நின்று ஏகமனதாய் நிறைவேறியது.

2. "மாண்டேகு ஜேம்ஸ்போர்டு சீர் திருத்தப்படி ராஜிய விஷயத்தில் ஓட்டு சுதந்திரமே பிரதானமாயிருப்பதாலும், கிராமத்திலுள்ள கர்ணங்களே லிஸ்டிலுள்ள ஓட்டர்களைப் பதிவு செய்யவேண்டியிருப்பதாலும் வேண்டுமென்று துவேஷங்கொண்டு அனேக நாடார் ஓட்டர்களைப் பதிவுசெய்யாமல் விட்டிருப்பதால் அப்படி நேராவண்ணம் சங்கம் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது."

நாசரேத் ஸ்ரீமான் பி. எஸ். கனியப்பநாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு உடுமலைப்பேட்டை ஸ்ரீமான் பி. துரைச்சாமிநாடார் பி. ஏ. அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

3. "திருநெல்வேலி ஜில்லாவில் நாடார் கர்ணங்கள் அபூர்வமாயிருப்பதால் நாடார்கள் வசிக்கும் கிராமங்களுக்கு நாடார் கர்ணங்களை ஏற்படுத்த வேண்டுமென்று இக்கூட்டம் கவன்மெண்டைக் கேட்டுக் கொள்ளுகிறது."

நாசரேத் ஸ்ரீமான் பி. எஸ். கனியப்பநாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு மதுரை ஸ்ரீமான் வ. தி. சங்கரலிங்கநாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

4. (a) "போடி நாயக்கனூர், திருவாரூர் முனிசிபாலிட்டிகளில் நாடார் கௌன்சிலர்கள் இல்லாமையால் முறையே திருமலாபுரம் ஸ்ரீ. ஏ. செந்திவிநாயகநாடார் அவர்களையும், திருவாரூர் ஸ்ரீ. வெ. சாமிநாதநாடார் அவர்களையும் கௌன்சிலர்களாக நியமனம் செய்யவேண்டுமாறு இம் மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(b) "தாலுகா போர்டு, ஜில்லாபோர்டு, முனிசிபல் கௌன்சில், கௌரவ பெஞ்சு மேஜிஸ்ட்ரேட் முதலிய ஸ்தானங்களில் நாடார்கள் பிரதிநிதித்துவம் இருக்கும்படி செய்யவேண்டுமாய் இம் மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது."

பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் டபிள்யு. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்களால் பிரேரிக்கப்பட்டு திருமலாபுரம்ஸ்ரீமான் எஸ். ஆர். சாமிக்கண்ணு நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

## இலங்கை.

### "இந்திய கேசரி"

மேற்கண்ட மகுடத்துடன் இலங்கை இந்திய ஜன சமூகத்திற்காக ஓர் மாதாந்தப் பத்திரிகை ஆரம்பிக்கிறதற்கு வேண்டிய கோரிக்கைகள் நடந்து வருகின்றன. அரசாங்கத்திலும் இப்பத்திரிகை பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதற்குவேண்டிய அச்சயந்திரசாலையும் அதற்குரிய தளவாடங்களும் ஐரோப்பாவிலிருந்து கூடிய சீக்கிரம் வந்திறங்குமென அறிகிறேன். இதன் ஆசிரியரும் சொந்தக்காரருமான நமது குலத்தோன்றல்ஸ்ரீமான் ஞா. பா. வேதநாயகநாடாரவர்கள் ஜில்லா நீதிபதியிடம் சென்ற வெள்ளிக்கிழமையில் சத்திய பிரமாணஞ் செய்து கொடுத்தார்கள். முதல் இதழ் டிசம்பர் மாதத்தில் வெளிவரும். வருடச்சந்தா ரூபாய் ஒன்றேயாகும். இதன் விலாசம். "இந்திய கேசரி" ஆபீஸ், தெஹிவளை, இலங்கை என ஸ்ரீமான் ஞா. ஆனந்தம் நவமணி எழுதுகிறார்.

திருநெல்வேலி ஜில்லா வாசியும், சென்னை ஹைக்கோர்ட் நீதிபதியுமான ஸ்ரீமான் தேவதாஸ் அவர்களின் குமாரத்தி ஸ்ரீமதி சீதாதேவதாஸ் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பரீட்சையில் தேறியிருக்கிறார்.

• • •

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இராமச்சந்திரபுரம் திவான் பகதூர் தி. நா. முத்தையா செட்டியாரவர்கள் தமது தாயார் பெயரால் புதியதோர் கிராமத்தை உமையாள்புரம் எனும் பெயருடன் ஏற்படுத்தியிருக்கிறார்.

• • •

ஜெர்மனி நடனமாது மிஸ் டன்கன் என்பார் தனதுவழக்கப்பிரகாரம் நீண்ட அங்கவஸ்திரத்தை கழுத்தில் போட்டுக்கொண்டு மோட்டார்வாகனத்திலேறிக் கொண்டு செல்கையில் துரதிஷ்டவசமாய் வஸ்திரம் சக்கரத்தில் மாட்டிக்கொள்ளவே சுருக்கி இருக்க கழுத்து முறிந்து இறந்தார்.

---

5. "நமது ஜன சமூகத்தில் ஒவ்வொருவர் வீட்டிலும் நடக்கும் சுப அசுப காரியங்களுக்கு நமது குலத்தவர்களையே கொண்டு நடத்த வேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

அருப்புக்கோட்டை ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டிய நாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு சாத்தூர் ஸ்ரீமான் ஞா. வி. ஆறுமுக நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

6. "நமது சொந்த ஆலயங்களில் நமது குலத்தவர்களையே அர்ச்சகராக நியமிக்கவேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

மதுரை ஸ்ரீமான் வ. தி. சங்கரலிங்க நாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு கும்பகோணம் ஸ்ரீமான் செ. தங்கவேல் நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

"7. நமது தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற நமது தேசத்திலேயே உற்பத்திசெய்கிற சுத்தக் கதர் வஸ்திரங்களையே நம்மவர்கள் உபயோகப்படுத்த வேண்டுமாய் இம் மகாநாடு தீர்மானிக்கிறது."

அருப்புக்கோட்டை "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு நாகை எஸ். கே. ராமசாமி நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

இத்துடன் மஹாநாட்டின் இன்றைய நடவடிக்கைகள் முடிந்தன.

நாடார் மஹாஜன மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ ஆர். கே. ஷண்முகஞ்செட்டியார் அவர்கள் இன்று மாலை ராமேசுவரம் எக்ஸ்பிரஸில் கோயம்புத்தூருக்குப் பிரயாணமானர். ஏராளமான ஜனங்கள் அன்னவருக்கு ரயில்வே ஸ்டேஷனில் மாலையிட்டு பிரிவுபசாரம் செய்தனர்.

---

(6-ம் பக்கத்தின் தொடர்பு.)

தையும், கூட்டுறவும் பொறுமையும் கண்டு நான் மகிழ்வடைகின்றேன். என்ன வரினும் வருக! இந்த உத்தம குணங்களை விட்டிடாதீர்கள்.

## சீன தேசத்தினின்றுமோர் படிப்பினை.

இந்த நாடார் மகாஜன சங்கமானது உங்களிலே சிறுவர்களுடைய முயறசியினல் ஸ்தாபிக்கப்பெற்றது என்று நான் கேள்விப்படுகிறேன். இதுதான் ரொம்ப சரி. இவ்வுலகத்தில் எங்கு பார்த்தாலும் சீர் திருத்தம், பெரிய மாறுபாடுகள் ஏற்படுவதற்குக் காரண பூதர்களாக இருப்பவர்கள் இளைஞர்களாகவே இருக்கின்றனர். இதுபோழ்து சீன தேசமானது தனது இளைஞர்களாலேயே பரிணாம தசையிலிருக்கிறது. சீன தேசத்துச் சிறுவர்களின் முயற்சியைப்பற்றி, அவர்களுள்ளே முன்னணியில் நின்ற ஒருவர் பின் வருமாறு எழுதியிருக்கின்றார். "தொடக்கத்திலே எங்களுடைய இயக்கமானது அதிருப்தியடைந்த ஒரு சிறிய கூட்டத்தாரால் துணிந்து மேற்கொள்ளப்பட்டது. சீனவின் சீர்திருத்தத்துக்குப் பேருதவியாக நிற்கும் ஒரு பெரும் சக்தியாக இப்போது கருதப்படுகிறது. அது ஜனங்களுக்கு புதியதோர் நோக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அதுதான் இப்பெரிய மாறுதலுக்கடிப்படையான கொள்கை. அதனல் பொதுஜன அபிப்பிராயம் வழிப்பட்டிருக்கிறது. புதிய சீனதேசத் தலைவர்கள் ராஜதந்திரிகள் அல்ல; ராணுவவீரரல்ல என்பதை உலக முழுவதுக்கும் எடுத்துக்காட்டிவிட்டது இதுவரையில் பின்னணியிலே வலுவந்தமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த புத்திக்கூர்மையுள்ள சாமான்ய சிறுவர்கள் தாம். சீனப்பொது மக்கட்கு அவர்களிடம் நம்பிக்கை பிறந்து விட்டது. ராணுவத்தினரும், ராஜதந்திரிகளும் அவர்களை மதிக்கத் தொடங்கிவிட்டனர். முதலாவது அபினி யுத்தத்துக்குப்பின், க்ஷேமமாகத் தாங்கள் அனுபவித்து வந்த உரிமைகளைக் குறித்து இனி என்னமோ என்று அயல் நாட்டினர் கருதும்படிக்கேற்பட்டு விட்டது."

### இறுவாய்:—

### சிறுவர்கட்கோர் சொல்.

சீனதேசச் சிறுவர்கள் அந்நாட்டில் என்ன லாபத்தை அடைந்துள்ளார்களோ—அடைந்து வருகின்றார்களோ, அதனையே நான் என் முன் வீற்றிருக்கும் சிறுவர்கள் பாலும் எதிர்பார்க்கின்றேன். ஒரு தேசத்துச் சிறுவர்கள் உணர்ச்சி கொண்டெழுவதுதான் பொது ஜனங்களுடைய நல்வாழ்வுக்கு அடிப்படையானது. நமக்கு நேரிடக்கூடிய இன்னலிடைஞ்சல்களைப் பொருட் படுத்தாதிருப்போமாக. இது செய், இது செய்யாதே என்னும் பழய கட்டளைகளை நாம் பொருட்படுத்தாதிருப்போமாக. அகங்காரப்பித்தேறிய 'மேல் ஜாதியினர்' என்போருடைய ஒழுக்கு முறைகளைப் பொருட்படுத்தாதிருப்போமாக. இன்னும் எத்தனையோ இடையூறுகள் நமக்கு எதிர்ப்படலாம். ஆனல் இயக்கத்துக்கு உயிர் கொடுத்துவிடின் அது நமக்கு நிச்சயமாய் வெற்றியைப் பயந்தே தீரும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

கூடங்களும் (ஹைஸ்கூல்கள்) சுமார் 120 ஆண் பிரதம பாடசாலைகளும் 15 பெண் பாடசாலைகளும் இருந்து வருகின்றன. நம்மவர்களின் ஜனத்தொகையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தற்சமயம் இருந்துவரும் பள்ளிக்கூடங்களின் தொகை மிகவும் குறைவானது. ஆகையால் இது விஷயமாய் ஆங்காங்குள்ள அபிமானிகள் கொஞ்சம் பிரயாசையெடுத்துக் கொள்வார்களாயின் நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊர்களிலும் இலகுவில் ஏராளமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க முடியுமென்பதுடன், இனிவரப்போகும் சென்ஸஸ் கணக்கில் குறைந்தபக்ஷம் 100-க்கு 50 பேர்களாவது எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகப் பதிவு ஏற்படுமென்பது திண்ணம்.

## பண உதவி.

பள்ளிக்கூடங்கள் வைத்துப் பராமரிக்கப் போதுமான பணவசதியில்லாத கிராமங்களிலுள்ள நம் பிரதம பாடசாலைகளுக்கு வழக்கம்போல் 1925-26 வருஷத்துக்கு ஸ்கூல் கிராண்டுக்காக ரூ 480-ம் நம்குல மாணவமாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் உபவிதிகளை யனுசரித்து ரூ 2352-ம் கொடுக்க சாங்க்ஷன் செய்யப்பெற்றதை பூராவும் செலாவணி செய்வதற்கு, சங்காபிமானிகள் ஒத்துழைப்பின்மையால் பணவருவாய் குன்றியதாலும், முக்கிய நகரங்களில் தலைக்கட்டுவரி வசூலாகாத காரணத்தால் பிரசாரகர்கள் கிராமங்களில் வரிவசூல் செய்யமுடியாமற் போய்விட்டதாலும், மேற்படி தொகையை பின்னால் லாட்டரியின் வெற்றியில் கிடைத்த ஸ்காலர்ஷிப் நிதியிலிருந்து ஈடுசெய்யப்பெற்றது. அதன் காரணத்தால் 1926-27 ஸ்ரீ த்துக்கு ஸ்கூல் கிராண்டும் ஸ்காலர்ஷிப்பும் கொடுப்பதை நிறுத்திவைக்க நேர்ந்தது. 1927-28 வருஷத்துக்கு ஸ்கூல் கிராண்டுக்காக ரூ 750-ம் ஏழை மாணவ மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப்புக்காக ரூ 750-ம் சாங்க்ஷன் செய்யப்பெற்றது. ஸ்காலர்ஷிப் விண்ணப்பங்கள் வருஷாவருஷம் அதிகரித்து வந்துகொண்டிருக்கின்றன. விண்ணப்பம் செய்தவரெல்லோருக்கும் பண உதவி செய்வதற்குப் போதுமான பணம் நம் சங்கத்திலில்லை. சங்கத்தின் தீர்மானப்படி நம் குலத்தவர்களெல்லோரும் தவறாமல் தலைக்கட்டுவரியை கொடுக்கும் பக்ஷத்தில் ஏராளமான ஏழை மாணவர்களுக்கு பிரயோஜனமாயிருக்குமென்பதைக் குலாபிமானிகள் நன்கு கவனித்து, ஒவ்வொரு ஊர்களிலும் தலைக்கட்டுவரி வசூல் செய்து அனுப்பவேணுமாய் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## பிரசாரம்.

சங்கத்தின் நோக்கங்களையும் தீர்மானங்களையும் நம் குலத்தினர்களுக்குள் பரவச்செய்யும் பொருட்டு ஊர்கள்தோறும் பிரசாரகர்களையும், சங்கப் பிரசங்கங்களையும் அனுப்பியிருக்கிறோம். நம் ஜன சமூகமுன்னேற்றம், சட்டசபை தேர்தல், ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப்லாட்டரி, இவைகள் விஷயமாய் 21 பிரசுரங்கள் இந்த இரண்டு வருஷங்களில் வெளியிட்டிருக்கிறோம். பிரசாரகர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் 75 கிராமங்களிலும், இராமநாதபுரம் ஜில்லாவில் 60 கிராமங்களிலும், மதுரைஜில்லாவில் 20 கிராமங்களிலும், சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களில் 25 கிராமங்களிலும், கோயம்புத்தூர், சேலம், தஞ்சை, திருச்சி, ஜில்லாக்களில் 20 கிராமங்களிலும் பிரசாரம் செய்திருக்கிறார்கள். இவைகளில் மொத்தம் 140 பிரசங்கங்கள் செய்யப்பெற்றிருக்கின்றன. முன்னால் கூறியபடி தலைக்கட்டு வரி வசூலாகாதகாரணத்தாலும், பணவருவாய் குறைய ஆரம்பித்தபடியாலும், லாட்டரியின் வேலையை துரிதமாய் நடத்த தீர்மானித்தபடியாலும், பிரசாரகர்களின் தொகையைக் குறைக்க நேரிட்டதால் பிரசாரமும் குறைந்தது.

ஆங்காங்குள்ள நம் குலத்தினருக்குள் ஏற்படும் மனஸ்தாபங்களை பிரசாரகர்களின் முயற்சியால், நிவர்த்தி செய்து ஐக்கியத்தை யுண்டுபண்ணி பொது ஸ்தாபனங்களையும் பொது நிதிகளையும் சீர் திருத்தம் செய்ய ஏதுகரமாயிருந்ததுமன்றி, இந்த இரண்டு வருஷங்களில் பற்பல இடங்களில் பள்ளிக்கூடங்களும் வாசகசாலைகளும் ஸ்தாபிக்கலாயிற்று. புதிதாகச் சேர்க்கப்பட்ட கிளைச்சபைகளில் பெரும்பான்மை நமது பிரசாரகர்களின் முயற்சியால் ஏற்படுத்தப் பெற்றவைகள். அபிமானமும் ஆற்றலும் வாய்ந்த பிரசாரகர்கள் ஒவ்வொரு ஊருக்கும் அனுப்பக் கிடைக்கப்பெறுவதாதலால் குலாபிமானம் நிறைந்த நம் குலவாலிபர்கள் சங்கத்தின் நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு பிரசாரஞ்செய்ய முன்வரும்படியாய் விரும்பி அழைக்கிறோம். பிரசார வேலைக்காக இந்த இரண்டு வருஷங்களில் ரூ 2024—6—10 செலவாகியிருக்கிறது.

## கிளைக் கான்பரன்ஸ்கள்.

சங்கத்தின் நோக்கங்களைப் பரவச்செய்வதற்கு கிளைக் கான்பரன்ஸ்கள் முக்கிய சாதனங்களாதலின், ஜில்லா தாலூகா மகாநாடுகள் கூட்ட பிரசாரகர்களை எல்லா விடங்களுக்கும் அனுப்பிவைத்தோம். 1925-26 வருஷத்தில் இராமநாதபுரம்ஜில்லா முதல் மகாநாடு மாங்குடி, கடுக்காய்வலசையில் வெகு விமரிசையுடன் நடந்தேறியது. மகாநாட்டிற்கு சங்க உத்தியோகஸ்தர்களும் குலாபிமானிகளும் சென்று, மகாநாட்டைச் சிறப்பித்ததுடன் அவ்வட்டகையிலுள்ள நம் குலத்தவர்களுக்குள் கிளர்ச்சியையும் குலாபிமானத்தையும் உண்டாக்கினார்கள். இவ்விதமே ஆங்காங்குள்ள தலைவர்கள் பிரசாரகர்களுடன் ஒத்துழைத்து ஒவ்வொரு ஜில்லா தாலூகாக்களிலும் மகாநாடுகள் கூட்டி ஒற்றுமையையும் தேசாபிமானத்தையும் குலாபிமானத்தையும் விருத்தி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## கஷ்ட நிவாரண வேலை.

இராமநாதபுரம், பரமக்குடி தாலூகா, கீழ் ஆயக்குடி கிராமத்தில் நம்மவர்களுக்கும் மறவர்களுக்குமுள்ள கட்சிபேதகைளினால் மறவர் நம்மவர்களை பலவித இடுக்கண்கள் செய்வதாகத் தகவல் கேட்டு, சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் எ. எம். எஸ். அண்ணாமலைநாடார் அவர்களை யனுப்பி கட்சிபேதங்களின் காரணங்களை நேர விசாரித்து வேண்டிய காரியங்கள் செய்துகொடுக்கும்படி ஏற்பாடு செய்தோம். அன்னவர் சென்று விஷயங்களையறிந்து, கீழ ஆயக்குடி நாடார்களுக்கேற்பட்டிருக்கும் ஹிம்சையை நீக்கவேணுமாய் ஜில்லா அதிகாரிக்கும், பரமக்குடி மாஜிஸ்ட்ரேட்டுக்கும் விண்ணப்பங்கள் செய்ததினால் அதிகாரிகள் அவ்வூருக்குச் சென்று விசாரித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தனர்.

திருப்பத்தூர் தாலூகா கல்லல் கிராமத்து மேலவாரதாரகள், நாடார்களுடைய கோவில் உற்சவ விஷயத்தில் கலகத்துக்கு யெத்தனப்பட்டு பலவித அட்டூழியங்களும் ஹிம்சைகளும் செய்வதாக அவ்வூர் நாடார்கள் முறையிட்டுக் கேட்டுகொண்டதின் பேரில் ஸ்ரீமான்களான ஆ. அ. ஆறுமுகநாடார் அவர்கள், ப. ல. சோமசுந்தரநாடார் அவர்கள், கே. முத்துக்குமாருநாடார் அவர்கள் சிவகெங்கை ஆ. வெ. பழனியப்பநாடார் அவர்கள், இநான்கு பேர்களையும் அவ்வூருக்கு அனுப்பி வைத்தோம். அவர்கள் அங்கே போய் இரண்டு கட்சிக்காரர்களுக்குள்ளும், சமாசத்தையுண்டுபண்ணி நம்மவர்களுக்செவ்வித கஷ்ட நஷ்டங்களுமேற்படாமல் சமாதானத்துடன் கோவில் உற்சவத்தை நடத்திவைத்தார்கள்.

## கமிட்டிகள்.

சங்கத்தின் வேலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதாலும், சகல வேலைகளையும் சங்கம் உத்தியோகஸ்தர்களும் பிரசாரகர்களுமே கவனிப்பது அசாத்தியமாதலாலும், சங்கத்தின் சட்டதிட்டங்களை யனுசரித்து ஜெனரல் மீட்டிங்குகளிலும் கவுன்ஸில் மீட்டிங்குகளிலும் அநேக கமிட்டிகள் நியமிக்கப்பெற்றன.

திருமங்கலம், விருதுநகர், சிவகாசி, பாளையம்பட்டி, அருப்புக்கோட்டை முதலிய ஊர்களில் தலைக்கட்டுவரி வசூலிப்பதற்காக ஸ்ரீமான் வை. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்கள் தலைமையின் கீழ் நியமிக்கப்பெற்ற கமிட்டி கஞ்சநாயக்கன்பட்டி, அருப்புக்கோட்டை இந்த இரண்டு ஊர்களில் மட்டும் ரூ 300 வரை வசூல் செய்தது.

இராஜபாளையம் நாடார்களுக்குள்ளிருக்கும் கட்சிப் பிரதிகட்சிகளைத் தீர்த்து வைப்பதற்கு நியமிக்கப்பெற்ற கமிட்டி தன்னுடைய வேலையை திருப்திகரமாகச் செய்திருக்கிறது.

ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப் நிதி சேர்ப்பதற்காக சங்கம் பிரசிடெண்ட் ஸ்ரீமான் பாலகுருசாமிநாடார் அவர்களின் தலைமையின் கீழ் நியமிக்கப்பெற்ற 38 மெம்பர்களடங்கிய கமிட்டியின் சில மெம்பர்கள் மட்டும் செய்த முயற்சியினால் ஒருவாறு லாட்டரியை வெற்றியுடன் நடத்திவைத்தது.

கோவில்பாளையம், நாடார்களுக்குள்ளிருக்கும் ஒற்றுமைக் குறைவை நிவர்த்தித்து மகமை சீர்திருத்தஞ் செய்ய ஸ்ரீமான் ஆ. அ. ஆறுமுகநாடார் அவர்களின் தலைமையின் கீழ் நியமிக்கப்பெற்ற கமிட்டி திருப்திகரமாய் காரியங்களை நடத்திவைத்திருக்கிறது.

1925—26 வருஷத்தின் ஸ்காலர்ஷிப், ஸ்கூல் கிராண்ட் விண்ணப்பங்களை பரிசோதித்து பண உதவி புரிவதற்கு சங்கத்தின் விதிகளின்படி லாயக்குள்ள விண்ணப்பதாரர்களைத் தெரிந்தெடுப்பதற்காக, ஸ்ரீமான் வை. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்களின் தலைமையின் கீழ் நியமிக்கப்பெற்ற கமிட்டி, பீ. ஏ. வகுப்பில் வாசிக்கும் 5 மாணவர்களுக்கும், 1 மாணவிக்கும், யப். ஏ. வகுப்பில் வாசிக்கும் 7 மாணவர்களுக்கும், 1 மாணவிக்கும், ஹைஸ்கூல் வகுப்புகளில் வாசிக்கும் 8 மாணவர்களுக்கும், 1 மாணவிக்கும், லோயர் செக்கண்டரி வகுப்புகளில் வாசிக்கும் 6 மாணவிகளுக்கும், பிரதம பாடசாலைகளுக்கும் ரூ 2832—0—0 பண உதவி புரிய சிபார்சு செய்தது.

## வரவு செலவு.

இந்த இரண்டு வருஷங்களில் அடியிற் கண்ட வரவு செலவுகள் நடந்திருக்கின்றன.

### வரவு.

| விபரம். | 1925-26-ஸ்ரீ ரூ | அ | ப | 1926-27-ஸ்ரீ ரூ | அ | ப |
|---|---|---|---|---|---|---|
| வருஷத்துவக்கத்தில் இருப்பு ... | 4405 | 1 | 6 | 1818 | 14 | 7 |
| சந்தா:— | | | | | | |
| (a) ஆர்டினரி ... | 1082 | 0 | 0 | 165 | 0 | 0 |
| (b) ஸ்பெஷல் ... | 527 | 0 | 0 | 108 | 0 | 0 |
| (c) கிளைச்சபைகள் ... | 81 | 0 | 0 | 27 | 0 | 0 |
| தலைக்கட்டு வரி ... | 549 | 0 | 0 | | | |
| நன்கொடை ... | 131 | 0 | 6 | | | |
| ஸ்காலர்ஷிப் பண்டு ... | | | | 41796 | 6 | 1 |
| ரூல்ஸ் புஸ்தகம் விற்பனை ... | 7 | 8 | 0 | 5 | 4 | 0 |
| புரோவிஷனல் சர்ட்டிபிக்கேட் விற்பனை ... | 57 | 0 | 0 | 111 | 0 | 0 |
| சில்லரை வரும்படி ... | 109 | 5 | 2 | 97 | 14 | 10 |
| ஆக வரவு ரூ ... | 6948 | 15 | 2 | 43629 | 7 | 6 |

### செலவு.

| விபரம். | 1925-26-ஸ்ரீ ரூ | அ | ப | 1926-27-ஸ்ரீ ரூ | அ | ப |
|---|---|---|---|---|---|---|
| வாடகை ... | 403 | 0 | 0 | 476 | 0 | 0 |
| ஆபீஸ் சப்ளை ... | 160 | 11 | 1 | 28 | 14 | 3 |
| பாரம், ரிப்போர்ட்டு ... | 148 | 12 | 0 | 48 | 9 | 6 |
| தபால், தந்தி ... | 252 | 14 | 0 | 87 | 10 | 6 |
| மானேஜர் அலவன்ஸ் ... | 800 | 0 | 0 | 200 | 0 | 0 |
| சிப்பந்தி சம்பளம் ... | 546 | 15 | 5 | 137 | 6 | 0 |
| தீபம் ... | 42 | 15 | 3 | | | |
| ரிப்பேர் ... | 4 | 7 | 6 | | | |
| பிரயாணம் ... | 95 | 9 | 5 | 6 | 0 | 0 |
| பிரசாரம் ... | 2024 | 6 | 10 | 22 | 8 | 0 |
| ஸ்காலர்ஷிப் ... | 742 | 11 | 0 | 630 | 0 | 0 |
| ஸ்கூல் கிராண்டு ... | 207 | 0 | 0 | 288 | 0 | 0 |
| கவுன்ஸில் மீட்டிங்கு ... | 93 | 13 | 7 | 48 | 13 | 10 |
| ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கு ... | | | | 84 | 8 | 0 |
| புஸ்தகம் ... | 0 | 7 | 6 | | | |
| வாசகசாலை ... | 72 | 12 | 0 | 75 | 8 | 0 |
| இனும் ... | 13 | 0 | 0 | | | |
| மரசசாமான் ... | | | | 184 | 12 | 0 |
| சில்லரைச் செலவு ... | 12 | 2 | 0 | 82 | 13 | 0 |
| கூடங்குளம் கிளைச் சபை செலவு ... | 8 | 7 | 0 | | | |
| ஆக ரூ. ... | 5630 | 0 | 7 | 2396 | 2 | 1 |
| வருஷக்கடைசியில் இருப்பு:— | | | | | | |
| புள்ளிகள் பேரால் ... | 198 | 14 | 6 | 634 | 0 | 11 |
| வசக்கட்டு வசம் ... | 134 | 4 | 5 | 170 | 9 | 5 |
| குறிப்பு இருப்பு ரொக்கம் ... | 583 | 14 | 0 | 28 | 1 | 6 |
| இந்தியன் பாங்கு வசம் ... | | | | 38000 | 0 | 0 |
| சேவிங்ஸ் பாங்கு வசம் ... | 406 | 13 | 8 | 2400 | 9 | 7 |
| ஆக ரூ ... | 6948 | 15 | 2 | 43629 | 7 | 6 |

பா. ம. பாண்டிய நாடார்,
ஆ. அ. ஆறுமுக நாடார்,
காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

உலகம் போற்றும் உத்தமர், கலியுகக் கண்ணன், கண்கண்ட தெய்வம்,

சபர்மதி ஆச்சிரம சாது

# மஹாத்மா காந்தியடிகளுக்கு,

மதுரை, நாடார் ஊழியப் பிரசுர சபையார் வாசித்துக்கொடுத்த

# வந்தனோபசாரப் பத்திரம்.

புனித நாட்டிற்கு புத்துயிர் கொடுத்த புண்ணியசீலரே!

வருக! வருக!! எங்கள் தலைநகரத்திற்கு தாங்கள் விஜயஞ் செய்த இந்நாள் நன்னாளாகுக.

தரித்திரத்தால் இந்தியர்படும் சொல்லொணு கஷ்டங்களைக் கண்டு, கோடிக்கணக்கான ஜனங்களுக்கு வேலைதரக்கூடியதாயும், ஏழைகள் முதல் சகலரும் தங்கள் இல்லங்களில் தங்களுக்குப் பிரியமான காலத்தில் செய்யக்கூடியதாயும், மூலதனம் அதிகம் தேவையில்லாததாயும், பயிற்சி அதிகம் வேண்டாததாயும், எளிதில் விலைபோகக் கூடியதாயும், சகோதரத்துவத்தையும், சுதந்திரத்தையும், செல்வத்தையும், உண்டாக்கக் கூடியதாயுமுள்ள கதர் இயக்கத்தை உண்டாக்கித்தந்த தங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்ய வல்லோம்.

திருநெல்வேலி ஜில்லா, 'திசையன்விளை கிராமத்திலுள்ள நாடார்கள் கதர் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்களென்பதையும், நாடார்கள் கதர் அணிவதில் மிகவும் முன்னேற்றமடைந்து வருகிறார்களென்பதையும், கதரின் மேல் இந்தியர் யாவருக்கும் பற்றுண்டாகும் வழியில் எங்கள் முழு கவனத்தையும் செலுத்தி வேலைசெய்து வருகிறோமென்பதையும், இனியும் வேலைசெய்யப் பின்வாங்கோமென்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கலி நீக்கிய கதர் அரசே!**

"தமிழ் நாடு" 16—1—27, 23—1—27உ பத்திரிகைகளில் தமிழ்நாடு கதர் போர்டிலிருந்து கதர் அபிவிர்த்தியை முன்னிட்டு தனி மனிதர்களான 34 பேர்களுக்கும், கிளை ஸ்தாபனங்களுக்கும், கொடுக்கப்பட்ட பணங்களில் ரூ 1,10,100—7—2 (ஒரு லக்ஷத்தி பதினாயிரத்தி நூறும் அணா ஏழும் பைஸ் இரண்டும்) வசூலிக்க முடியாத நிலைமையிலிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது இம்மாதிரி சீர்கேடான நிலைமையில் நிர்வாகம் நடைபெறுமானால் நமது கோரிக்கை ஈடேறுமாவென்பதை கவனிக்கும்படி கேட்டுக்கொள்வதுடன், இனியாவது நிர்வாகம் சரியான முறையில் நடைபெறுமாறு திட்டம் செய்து வைக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

**சமத்துவத்தை விரும்பும் சபர்மதி ஆச்சிரம சாதுவே!**

நம்மில் ஒற்றுமை நிரம்பினாலன்றி, நாமும், நமது நாடும் க்ஷேமமடைய முடியாதென்பதை தாங்கள் நன்கறிந்ததே. இதனையறியாது, மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி, ஆகிய இப்பகுதிகளிலுள்ளோர் நாடார் ஜாதியின் முற்காலச் சரித்திரத்தையும், தற்காலப் போக்கையும் அறியாது செய்து வரும் காரியத்தைச் சுருக்கமாகச் சொல்கிறோம். செவிமடித்து நமது நாட்டின் க்ஷேமத்தை நாடி நற்காரியத்தை முடித்தருள்வீர்களென்று முழுமனதுடன் நம்புகிறோம்.

எங்கள் குலத்தவர்களுக்கு நாட்டையாண்டு வந்த காரணம் பற்றி நாடார் என்றும் பாண்டிய நாட்டிற்குடையவர்களாயிருந்ததை முன்னிட்டு பாண்டியன் குலத்தவர் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. இதனைக்குறித்து இங்கு நாங்கள் விஸ்தரித்துச்சொல்லவிரும்பவில்லை. காலவேற்றுமையால்எங்கள்முன்னோர்களுக்குள் ஏற்பட்ட மனத்தாங்கல்களால் சண்டை ஏற்பட்டுப் பாண்டியநாடு இற்றைக்கு 528 வருடங்களுக்கு முன்பு விஸ்வநாத நாயக்கரவர்கள் ஆளுகைக்குட்பட்டது. 1914-ம் வருடத்தில் நடைபெற்ற அகோர யுத்தத்தில் ரஷியா தேசம் ஜெயிக்கப்பட்டவுடன் ராஜீய அரசர் எவ்வித கொடுமைக்குட்பட்டு கொலை செய்யப்பட்டாரென்பதையும், பெல்ஜியம், மாண்டி நிக்ரோ, செர்வியா முதலிய தேச ஜனங்களும் அரசர்களும் ஜெர்மனியர்களால் ஜெயிக்கப்பட்டவுடன் எவ்வளவு இம்சைக்குட்பட்டு தேசத்தினின்றும் ஓடி ஒழிந்தார்களென்பதும் தாங்களறிந்ததே. அதுபோன்று நாடார்களும் கஷ்டப்படுத்தப்பட்டார்கள். அதோடு நாடார் குலம் மீண்டும் பெலம்பெற்று தங்களை தாக்கிடாவண்ணம் பல சொல்லொணு கொடுமைகளைச் செய்தார்கள். எனினும் நாடார்கள் தீவிர முற்போக்குடைய ஜாதியினராதலால் சகல கஷ்டங்களையும் சகித்து, தங்கள் குல தர்மத்தை கைவிடாது காப்பாற்றிக் கொண்டார்கள்.

அதோடு, தங்கள் குல தர்மப்படி பற்பல இடங்களிலும் ஆயிரக்கணக்கான தண்ணீர் தர்மம், தர்மச் சத்திரம், தேவாலயம். வித்தியாலயம், பூஞ்சோலைகள் முதலியவைகளை ஏற்படுத்தி தங்களை இம்சைப்படுத்தும் மற்றவர்களுக்கும அதில் இடங்கொடுத்தார்கள். இதிலாவது இவர்களுக்கு விவேகமுண்டாகாதா என்பது அவர்களது எண்ணம். அப்படியும் உண்டாகவில்லை ஆனால் மேலும் மேலும் அவிவேகம் ஏற்பட்டு அவர்களுடைய தர்மங்களையும் பிடுங்கிக்கொண்டதோடு வளர்பிறை சந்திரன்போல் பிரகாசித்துவரும் நாடார் ஜாதியின்மேல் பொறாமைகொண்டு 1860ஆம்-வருடத்தில் அருப்புக்கோட்டைஎன்னும் பெரிய நகரமும், 1899ஆம்-வருடத்தில் சிவகாசி என்னும் பெரிய நகரமும், 1918ஆம்-வருடத்தில் கமுதி என்னும் பெரிய நகரமும் கொள்ளையிடப்பட்டது. இதனால் நாடார் ஜாதியின் முன்னேற்றம் தடைபட்டுவிடவில்லை.

நாடார்கள் நாகரீகத்திலும், செல்வத்திலும், வர்த்தகத்திலும், கல்வியிலும் மற்றவர்களுக்கு விட்டுப்போகாமலும், தங்கள் பொது ஸ்தாபனங்களில் மற்றவர்களுக்கு சமத்துவமளித்தும் வருமிக்காலத்தில் இம் மூன்று ஜில்லாவிலுள்ள பொது ஸ்தாபனங்களில் நாடார்களுக்கு சம உரிமையில்லையெனக்கூறுவது நம் நாட்டின் பிற்போக்கை எவ்வளவுதூரம் எடுத்துக்காட்டுகிறதென்பதை கவனியுங்கள்.

இனியும் நம் நாட்டினர் அவிவேகத்தில் ஆழ்ந்துவிடாது, அவர்களுக்கு நற்புத்தி புகட்டி நல்வழியை திறந்து நடத்திச் செல்வீர்களென்று நம்புகிறோம்.

ஒற்றுமையின்றேல் நம் நாடு ஒருக்காலும் சுதந்திரமடையாது. இது உறுதி, இது சத்தியம்.

தங்களன்பிற்குரிய,

ஆபீஸ்:-
221, கீழமாரட்டு வீதி,
28—9—27,

**நாடார் ஊழியப் பிரசுர சபையார்,**
மதுரை.

நாடார் பிரஸ், மதுரை—27.